/பதிவுத்துறை/

அனுப்புநர்
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை–28.

பெறுநர்
அனைத்து துணைப் பதிவுத்துறை தலைவர்கள்,
அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்,
அனைத்து சார்பதிவாளர்கள்,
(இணைப்புடன்)

கடித எண்.6656/சி1/2022, நாள்.19.06.2024.

அய்யா/அம்மையீர்,

பொருள் : ஆவணப்பதிவு – தடை செய்யப்பட்ட நிலங்கள் – இந்து சமய அறநிலையத்துறை – அரசு நிலங்கள் ஆவணப்பதிவுகள் மேற்கொள்ளப்படலாகாது – வலியுறுத்தப்படுவது குறித்து.

பார்வை : 1.மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் W.P. No .27199/21, தீர்ப்பாணை நாள்.17.12.22.

2. பதிவுத்துறைத் தலைவர் கடித எண். 2304/இ1/2005, நாள்.02.05.2005

3. அரசாணை எண்.123, வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள். 20.10.2016 மற்றும் பதிவுத்துறைத் தலைவர் கடித எண்.39789/சி1/2007, நாள்.24.10.2016

4. பதிவுத்துறை தலைவர் கடித எண்.27150/சி3/2020, நாள்.24.12.2020

5. பதிவுத்துறை தலைவர் கடித எண்.36928/சி3/2021, நாள்.08.10.2021

6. பதிவுத்துறை தலைவர் கடித எண்.58014/சி1/2016–1, நாள்.17.09.2021

7. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்.3508/சி1/21, நாள்.07.02.2022

.....

பார்வை 2 முதல் 7 வரையிலான இவ்வலுவலக சுற்றறிக்கைகள்/கடிதங்கள் வழி முறையே இந்து சமய அறநிலையத்துறை, கலைமகள் சபா தொடர்பான நிலங்கள், PACL–க்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் பதிவு தடை, வகிப்போருக்கு சொந்தமான ஆவணங்களின் பதிவு நடைமுறை, சதுப்புநில ஆவணங்களின் பதிவு தடை நடைமுறை, நீர்நிலைகளின் ஆவணப்பதிவு

Verified RealEstate™

தடை குறித்தும் நீதிமன்ற பற்றுகை ஆணைகள்/தடையாணைகள் உட்பட விரிவாக பதிவு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மேற்காணும் இனங்கள் தொடர்பான ஆவணப்பதிவுகள் நிகழவாறு தடுத்திட/கண்காணிக்க ஏதுவாக, இத்துறையின் மென்பொருளை Star 2.0-ல் Prohibited Module எனும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

சம்மந்தப்பட்ட சார்பதிவாளர்கள் நிலையிலும், மாவட்டப்பதிவாளர்/துணைப்பதிவுத்துறைத் தலைவர்கள் நிலையிலும் மேற்காணும் Prohibited Module உள்நுழைவில் அரசின் பொதுக் கொள்கைகளுக்கு எதிரானதும் மேலே பட்டியலிடப்பட்டதுமான சொத்துக்கள் தொடர்பான விவரங்களை தவறாது உள்ளீடு செய்து விழிப்புடன் பணியாற்றிட பதிவு அலுவலர்களுக்கு மீளவும் வலியுறுத்தப்படுகிறது.

இதனில் ஏற்படும் பிழைகள்/விதி மீறல்கள், சட்ட சிக்கல்களை ஏற்படுத்துவதுடன் பதிவு அலுவலர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட வழிமுறைகளை தவறாது பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

தணிக்கை மாவட்டப்பதிவாளர்கள் தடை செய்யப்பட்ட நிலங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்ட மென்பொருள் தொகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து சிறப்பு தணிக்கை மேற்கொண்டு தணிக்கை அறிக்கையில் ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட துணைப்பதிவுத்துறை தலைவர்களுக்கு தெரிவித்திட அறிவிக்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு செயல்படவும் இந்த சுற்றறிக்கையை பெற்றுக்கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அனுப்பிவைத்திடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கோரப்படுகிறார்கள்.

ஒம்/-19.06.2024
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

மாவட்டப்பதிவாளர் (ஆய்வு)

3/7/24

Verified © RealEstate™

நகல் :

1. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை–14.
2. அனைத்து உயர் அலுவலர்கள், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்.
3. பதிவுத்துறைத் தலைவரின் நேர்முக எழுத்தர்.
4. நேர்முக உதவியாளர் (தனி),
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்.
5. முக்கிய ஆணைக்கோப்பு.
6. கணினி மென்பொருள்பிரிவு – (இணையதளத்தில் மேலேற்றம் செய்வதற்கு)

Verified RealEstate™